# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2022.05.06 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 120.00** **தபாற் செலவு : ரூபா 45.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

அரசியலமைப்பின் 4ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர், "அரசியமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 4 ஆம் உறுப்புரையை இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

(அ) நான்காம் உறுப்புரையின் (ஆ) என்னும் பந்தியில், "மக்களால் தெரிவு செய்யப்படும் குடியரசு சனாதிபதியினால்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "குடியரசு சனாதிபதியினாலும் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அமைச்சரவையினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(ஆ) நான்காம் உறுப்புரையின் (உ) என்னும் பந்தியில், "குடியரசு சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலிலும்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

அரசியலமைப்பின் 30 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**3.** ஆரசியலமைப்பின் 30 ஆம் உறுப்புரை இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

(அ) முப்பதாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "ஆட்சித் துறையினதும் அரசாங்கத்தினதும்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "ஆட்சித்துறையின்"

என்னும் சொல்லையும் 30 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் முடிவில், "வேண்டும்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வேண்டுமென்பதுடன், அவர் அரசியலமைப் பிற்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்." என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், "மக்களி னால் தேர்ந்தெடுக்கப்படும்" என்னும் சொல்லை நீக்கி விட்டு அதற்குப்பதிலாக, "இவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில், பாராளு மன்றத்தினால்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(இ) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியில், "ஐந்தாண்டு கள் கொண்டவொரு" என்னும் சொற்களுக்கு உடன் முன்னர், "சாதாரணமாக" என்னும் சொல்லை உட்புகுத்துவதன் மூலமும்;

(ஈ) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"ஆயின், அரசியலமைப்பில் முரணாக எது எவ்வா றிருப்பினும், சனாதிபதியாக அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட ஆள், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க அவர் பதவிவகிக்காதொழிந்தால் ஒழிய, அடுத்த பாராளுமன்றத்தினால் சனாதிபதியொருவர் தேர்ந் தெடுக்கப்படும் வரை தொடர்ந்து பதிவிவகித்தல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஆள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்று கழியவில்லையென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அடுத்த பாராளுமன்றத்தினால் சனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதன்மேல் அவர் பதவிவகிக்கா தொழிதல் வேண்டும்.".

(உ) முப்பதாம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும். இவை, 30 ஆம் உறுப்புரையின் (3),(4)(5) மற்றும் (6) ஆகிய பந்திகளாகப் பயனுறுதல் வேண்டும்:-

“(3) எண்பத்தெட்டாம் உறுப்புரையின்கீழ் தகைமைபெற்ற வரும் 89 ஆம் அல்லது 92 ஆம் உறுப்புரைகளின் கீழ் தகைமையற்றவராக இராதவருமான பிரசையொருவர், பாராளுமன்ற உறுப்பினர்களின் சாதாரண பெரும் பான்மையொன்றின் மூலம், சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் ஏற்பாடு செய்யக்கூடிய அத்தகைய நடவடிக்கை முறைக்கிணங்க, அதன் முதலாவது அமர்விலிருந்து நான்கு வாரங்களினுள், இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் களினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், பாராளுமன்றம் அத்தகைய சட்டத்தை இயற்ற வேண்டிய அத்தகைய காலம் வரை 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சனாதிபதி தேர்தல்கள் (விசேட ஏற்பாடு கள்) சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இறப்பின் மூலம், பதவி விலகுவதன் மூலம், பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அல்லது வேறு வகையாகச் சனாதிபதியின் பதவிவறிதாக வந்தால், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு. இவ்வுறுப் புரையின் (3) ஆம் பந்தியின் நியதிகளின்படி அவ்வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து நான்கு வாரங்களுக்குப் பிந்தாமல் தேர்தலொன்று நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட ஆள், பதவிக் காலத்தில் எஞ்சியுள்ள காலத்துக் குப் பதவிவகித்தல் வேண்டும்:

ஆயின், மேற்கூறியவாறு சனாதிபதியின் பதவி வெற்றிடமாகவரின் அத்தகைய வெற்றிடத்தை நிரப்ப பாராளுமன்றம் ஓர் ஆளை நியமிக்கும் வரை சனாதிபதி யின் பதவியில் சபாநாயகர் பதில் கடமையாற்றுதல் வேண்டும்:

ஆயின், மேலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் சனாதிபதியின் பதவி வறிதாக வந்தால், புதிய பாராளுமன்றமானது சனாதிபதியொருவரை மிகக் கிட்டிய சந்தர்ப்பத்தில் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அத்துடன் சபாநாயகராகப் பதவி வகித்த ஆள், பாராளுமன்றத்திற்கு ஒரு புதிய சபாநாயகர் தேர்ந் தெடுக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் புதிய சனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும்வரை சனாதிபதியின் பதவியில், தொடர்ந்து பதிற்கடமையாற்றுதல் வேண்டும்:

ஆயின், சபாநாயகர் பதில் கடமையாற்ற இயலாது விடின் பிரதி சபாநாயகர் அத்தகைய காலத்தின் போது சனாதிபதியின் பதவியில் பதில் கடமையாற்றுதல் வேண்டும்.

(5) சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளொருவர், சனாதிபதியாக அவர் பதவி வகிக்கும்வரை, ஏதேனும் அரசியற்கட்சியில் பதவி வகித்தலோ அல்லது அதன் உறுப்பினரொருவராகவிருத்தலோ ஆகாது.

(6) சனாதிபதிப் பதவிக்கு மக்களாலும் பாராளுமன் றத்தாலும் அல்லது மக்களால் அல்லது பாராளு மன்றத்தால் இருமுறை ஒவ்வொன்றினதும் காலப்பகுதி எவ்வாறிருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆள் எவரும் பாராளுமன்றத்தால் அத்தகைய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையிழந்த வராதல் வேண்டும்.

**4**. அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப் படுகிறது.

*அரசியலமைப் பின் 31 ஆம் உறுப்புரையை நீக்கிவிடுதல்*

**5**. *அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-*

*அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்*

*“சனாதிபதியின் கடமைகள் தத்துவங்கள் மற்றும் பணிகள்*

*33. (1) சனாதிபதியின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும்:-*

*(அ) அரசியலமைப்பு மதிக்கப்பட்டு போற்றப்படுதலை உறுதிப்படுத்தல்;*

*(ஆ) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துதல்; அத்துடன்*

*(இ) அரசியலமைப்புப் பேரவை மற்றும் VIIஅ என்னும் அத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்படும் நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப்படுத்துதலும் வசதியளித்தலும்.*

*(2) அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும் பணிகளுக்கும் மேலதிகமாக சனாதிபதி பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும்:-*

*(அ) பாராளுமன்றத்தின் சம்பிரதாயபூர்வமான அமர்வுகளில் தலைமைதாங்குவதற்கும்,*

*(ஆ) அரச தூதுவர்கள், உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரசுப் பிரதிநிதிகள், ஏனைய இராஜதந்திர*

முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரிப்பதற்கும் அவர்களை நியமித்துப் பொறுப்பளிப்பதற்கும்:

ஆயின் அரச தூதுவர்கள் உயர் ஆணையாளர்கள், பூரண அதிகாரம் பெற்ற அரச பிரதிநிதிகள் மற்றும் வேறு இராஜதந்திர முகவர்களை நியமிப்பதில் சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரை மீதே செயற்படுதல் வேண்டும்.

(இ) உயர் தொழிலில் பிரபலம் அடைந்துள்ளவர்களாகவும் உயர்ந்த நடத்தையையும் உயர்தொழிலில் நேர்மையையும் பேணி வந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை சனாதிபதி வழக்குரைஞர்களாக நியமிப்பதற்கும், இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் சனாதிபதி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் இராணி வழக்குரைஞர் ஒருவரால் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்துள்ளவையான அத்தகைய எல்லா சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்;

(ஈ) குடியரசின் பொது இலச்சினையைக் காப்பில் வைத்திருப்பதுடன், பிரதம அமைச்சரினதும் அமைச்சரவையின் அமைச்சர்களினதும், பிரதம நீதியரசரினதும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்

ஏனைய நீதிபதிகளினதும் நியமனப்பத் திரங்கள் மற்றும் குடியரசிற்கு உரித் தாக்கப்பட்டுள்ளனவும் வழங்கும்படி யும், கையளிக்கும் படியும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது சனாதிபதி தத்துவம் அளிக்கப்பட்டுள் ளனவுமான காணி வழங்கல்கள், காணிக் கையளிப்புக்கள், அசைவற்ற ஆதனவழங்கல்கள், அசைவற்ற ஆதனக் கையளிப்புக்கள் ஆகியவற் றைப் பொது இலச்சினையின் கீழ் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும், அந்த இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய எல்லா ஆவணங்களிலும் இலச்சினையிடுவதற்கும் இலச்சி னையை பயன்படுத்துவதற்கும்;

(உ) போர் மற்றும் சமாதானம் என்பவற் றைப் பிரகடனஞ் செய்வதற்கும்; அத்து டன்

(ஊ) அவராற் செய்யப்பட வேண்டுமென. நாட்டிடைச் சட்டத்தினால், வழக்காறி னால் அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும் அல்லது அதிகாரமளிக்கப்படுவளவும், அரசிய லமைப்பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாய் இராதனவும் ஆன அத்தகைய எல்லாச் செயல்களையும் விடயங்களை யும் செய்வதற்கும்.".

**6**. அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரை கள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அரசியலமைப்பின் 33அ மற்றும் 33 ஆ என்னும் உறுப்புரையாகப் பயனுறுதலும் வேண்டும்-

“சனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்பாதல்

33அ. சனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அப்போதுள்ள சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும், தமது தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் உரியமுறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

33ஆ. அரசியலமைப்பில் மறுவாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் படியே செயற்பட வேண்டும்.”.

அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

7. அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையானது பந்தி (4) பயனுற வேண்டிய பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற் றிருத்தப்படுகிறது:-

“(4) இவ்வுறுப்புரைக்கு முரணாக எது எவ்விதமிருப்பினும் சனாதிபதி பிரதம அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகிய இவருடைய ஒருப்பாடு தவிர பந்திகள் (1), (2) மற்றும் (3) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை பிரயோகிக்கக் கூடாது.”.

அரசியலமைப்பின் 35 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

8. அரசியலமைப்பின் 35 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்திக்கான இரண்டாம் காப்புவாசகத்தில் “(எ) என்னும் பந்தியின்” என்னும் சொற்களை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக (2) ஆம் பந்தியின் (உ) என்னும் இலக்கத்தையும் சொற்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுறுப்புரையின் (3) ஆம் பந்தியில் “44 ஆம்” உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் சனாதிபதிக்கு குறித்தளிக்கப்பட்ட அல்லது சனாதிபதியின் பொறுப்பில்

இருக்கும் ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் விடயம் அல்லது பணி சம்பந்தமான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது'' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(இ) (3) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 37 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**9**. அரசியமைப்பின் 37 ஆம் உறுப்புரை இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு பின்வரும் புதிய பந்தியை பதிலீடுசெய்வதன் மூலம்; அது (1) ஆம் பந்தியாகப் பயனுறுதல் வேண்டும்:-

"(1) சனாதிபதி சுகவீனம் காரணமாக இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணமாக தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாதிருப்பராயின் அவர் அத்தகைய காலத்தின் போது சனாதிபதி என்ற பதவியில் பதிற்கடமையாற்ற சபாநாயகரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர் சனாதிபதி என்ற பதவிக் குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண் டும்:

ஆயின் சபாநாயகர் பதில் கடமையாற்ற இயலாது விடின் பிரதி சபாநாயகர் அத்தகைய காலத்தின் போது சனாதிபதியின் பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறை வேற்றுதலும் வேண்டும்.".

(ஆ) அதன் (2) ஆம் பந்தியில்-

"சபாநாயகரை கலந்தாலோசித்தபின்னர்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாக, "பிரதம அமைச்சரை கலந்தாலோசித்த பின்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) "அவரது அபிப்பிராயத்தை அவர் சபாநாயகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதன்மேல் அத்தகைய காலத்தின்போது முதலமைச்சர்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாக, "அவரது அபிப்பிராயத்தை பிரதம அமைச்சகருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அதன்மேல் அத்தகைய காலத்தின்போது சபாநாயகர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

அத்துடன் இந்த உறுப்புரையின் "என்னும் சொற்களிலிருந்து நியமித்தலும் வேண்டும்" என்பது வரையான சொற்களை நீக்குவதன் மூலமும்;

(ஈ) அதன் (2) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின் சபாநாயகர் பதிற்கடமையாற்ற இயலாதிருப்பின், அத்தகைய காலத்தின்போது சனாதிபதி பதவியின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரதி சபாநாயகர் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் வேண்டும்.".

அரசியலமைப்பின் 38 ஆம் உறுப்புரையை திருத்துதல்

**10**. அரசியலமைப்பின் 38 ஆம் உறுப்புரையின் பந்தி (2) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது:-

"(2) சனாதிபதியின் பதவியானது (சமூகமளிக்காதோர் உட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின்

அரைவாசிக்குக் குறையாதோர் சனாதிபதிக்கெதிரான ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு சார்பாக வாக்களிப்பதன் மீது வறிதாதல் வேண்டும். அத்தகைய தீர்மானம் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்டு முழு பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றிலொன்றுக்கு குறையாத எண்ணிக்கையானவர்களினால் எழுத்திலான அறிவித்தல் மூலம் சமர்பிக்கப்படலாம்.".

*அரசியலமைப்பின் 39 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**11.** அரசியலமைப்பின் 39 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் 2 ஆம் பந்தியில்–

''முதலமைச்சரே'' எனும் சொல்லுக்கு பதிலாக "சபாநாயகரே" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

''வேண்டுமென்பதுடன்'' என்னும் சொல் முதல் அப்பந்தியின் இறுதிவரையான சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாக, ''வேண்டும்'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (2) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் புதிய காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:-

''ஆயின் சபாநாயகர் பதிற்கடமையாற்ற இயலாதிருப்பின் அத்தகைய காலத்தின்போது பிரதி சபாநாயகர் சனாதிபதி பதவியின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவும் என பாராளுமன்றத்தின் வேறெவரேனும் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரையை நீக்கிவிடுதல்*

**12.** அரசியலமைப்பின் 40 ஆம் உறுப்புரை இதனால் நீக்கப்படுகிறது.

*அரசியமைப் பின் 41 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**13**. அரசியலமைப்பின் 41 ஆம் உறுப்புரையானது அதன் (1) ஆம் பந்திக்கான காப்புவாசகமாக பயனுறவேண்டிய பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது:-

> "ஆயின் அமைச்சரவையானது, அவ்வாறு நியமிக்கப்படக் கூடிய செயலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாட் தொகுதியினர் என்போரின் அதிகபட்ச எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.".

*அரசியலமைப் பின் VII அ என்னும் அத்தியாயத் தினை மாற்றீடு செய்தல்*

**14**. அரசியலமைப்பின் VII அ என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:-

"அத்தியாயம் VII அ

**அரசியலமைப்புப் பேரவை**

*அரசியலமைப் புப் பேரவையின் அமைப்பு*

*41அ*. (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய (இவ்வத்தியாயத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவையொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) சபாநாயகர்;

(ஆ) பிரதம அமைச்சர்;

(இ) பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்;

(ஈ) பிரதம அமைச்சரினாலும் எதிர்க்கட்சித் தலைவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப் படுவதன் மீது சனாதிபதியினால் நியமிக் கப்படும் ஐந்து ஆட்கள்;

(உ) பிரதம அமைச்சரும் எதிர்கட்சித் தலைவரும் எந்த அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்துள்ளார்களோ முறையே அந்த அரசியற் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுக்கள் அல்லாத அரசியற் கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் உடன்பாட்டின் மீது பெயர்குறிக்கப்பட்டு சனாதிபதியினால் தியமிக்கப்படும் ஒருவர்.

(2) சபாநாயகர் பேரவையின் தவிசாளர் ஆதல் வேண்டும்.

(3) ஒராம் பந்தியின் உட்பந்தி (ஈ) அல்லது (உ) என்பதன் கீழான பெயர்குறித்த நியமனங்களுக்கு ஆன சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் நியமனங்கள் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துதல் சபாநாயகரின் கடமையாதல் வேண்டும்.

(4) ஒராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்து ஆட்களை பெயர்குறித்து நியமிக்கையில் பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும். அரசியலமைப்பு பேரவை. உயர்தொழில் மற்றும் வேறுபட்ட சமூகங்கள் உள்ளிட்ட இலங்கை சமூகத்தினரின் பல்லின தன்மையைப் பிரதிபலிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளதும், சுயேச்சைக் குழுக்களதும் தலைவர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(5) ஒராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட வேண்டிய ஆட்கள் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று

சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களாதல் வேண்டும். இவர்களது பெயர் குறித்த நியமனம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1) ஆம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் கீழ் செய்யப்பட்ட பெயர் குறித்த நியமனங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான தகவல் கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களினுள் அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாள் காலப்பகுதியினுள் அவசியமான நியமனங்களை செய்யத்தவறும் பட்சத்தில், பெயர் குறித்து நியமிக்கப்பட்டோர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்

(7) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் சபாநாயகரும், பிரதம அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ள பேரவையின் உறுப்பினர்களும் அத்தகைய கலைப்பைப் பின்பற்றிய ஒரு பொதுத் தேர்தலின் பின்னராக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், பிரதம அமைச்சராக நியமிக்கப்படும் அல்லது எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அல்லது ஒரு புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய காலம்வரை, பேரவையின் உறுப்பினர்களாகப் பதவியைத் தொடர்ந்து வகித்தல் வேண்டும்.

(8) ஓராம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் பேரவையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் சனாதிபதிக்கு

முகவரியிட்டனுப்பும் எழுத்தின் மூலம் முன்ன தாகவே அவரது பதவியைத் துறந்தாலொழிய அல்லது பிரதம அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரும், அத்தகைய உறுப்பினர் பதவியில் மேற்கொண்டு பணியாற்றுவதற்கு இயலாதவராகவும் அத்துடன் உடல்ரீதியாக அல்லது உளரீதியாக இயலாதவராகவும் உள்ளார் என அபிப்பிராயம் கொள்ளுவதன் மீது, சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் அவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டி ருந்தாலொழிய அல்லது அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மான மொன்று நிறைவேற்றப்பட்டிருந்தாலொழிய அல்லது 41(உ) என்னும் உறுப்புரையின் (7) ஆம் பந்தியின் கீழ் அவருடைய பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்பட்டாலொழிய, அவர் அத்தகைய உறுப்பின ராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண் டும்.

(9) ஓராம் பந்தியின் (ஈ) அல்லது (உ) என்னும் உபபந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்க ளிடையே வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சனாதிபதி, அத்தகைய வெற்றிட மேற்பட்டு பதினான்கு நாட்களுக்குள்ளாகவும் அத்நுடன் மேற்சொல்லப்பட்ட உட்பந்திகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கெடுத்தும், அத்தகைய உறுப்பினரை அடுத்துப்பின்னுறுவதற்கென வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் எவரேனுமாள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாறோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின் போது பதவிவகித்தல் வேண்டும்.

(10) ஓராம் பந்தியின் (ஈ) மற்றும் (உ) என்னும் உட்பந்திகளின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பின ரொருவர் அடுத்துறும் ஒரு பதவிக்காலத்துக்கு மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகலாகாது.

(11) ஓராம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் கீழும் (உ) என்னும் உட்பந்தியின் கீழும் சனாதிபதி யினால் செய்யப்படும் நியமனங்கள் சபாநாயகருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**பேரவையானது நியமனங்களை விதந் துரைத்தல்**

41ஆ. (1) ஆளெவரும், பேரவையின் விதப்புரை யொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்ட வணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக் களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப் பினரொருவராக சனாதிபதியினால் நியமிக்கப்பட லாகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுவதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதி பதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட இலங்கையரின் வெவ்வேறு பல்லினத்தன்மையை பிரதிபலித்தலை உறுதிப் படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில்,

பேரவையானது நியமனம் செய்யப்படுவதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக்கொண்ட பதின்நான்கு நாட்களினுள் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாட்களுக்குள் அவசியமான நியமனங்களைச் செய்யத்தவறும் பட்சத்தில்–

(அ) ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்: அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்கள் பட்டியலில் எவரின் பெயர் முதலாவதாக உள்ளதோ அவர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, அவ்வவ் ஆணைக்குழுவின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஆளெவரும் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளெவரும், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும்

எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்நதுடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப் படுதலும் வேண்டும்.

(6) தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த, இவ்வுறுப் புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் வகை சொல்லற்பாதலும் வேண்டும்.''.

**அட்டவணை**

(அ) தேர்தல் ஆணைக்குழு;

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு;

(இ) தேசிய பொலிசு ஆணைக்குழு;

(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழு;

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு;

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்நுரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு;

(எ) நிதி ஆணைக்குழு;

(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு;

(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு;

(ஒ) தகவலுக்கான உரிமை ஆணைக்குழு;

(ஓ) கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆகைண்குழு.

பேரவையானது நியமனங்களை அங்கீகரித்தல்

41இ. (1) ஆளெவரும் இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் எவற்றிற்கும், சனாதிபதியினால் பேரவைக்குச் செய்யப்படும் விதப்புரையின் மீது அத்தகைய நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவியில் பதின் நான்கு நாட்களை விஞ்சுமொரு காலப்பகுதிக்குப் பதிற் கடமையாற்றுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயினும் ஆளெவரும் சனாதிபதியின் விதப்புரை ஒன்றின் மீது அத்தகைய பதில்நியமனம் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய மொத்தத்தில் பதின்நான்கு நாட்களை விஞ்சும் தொடர்ந்துவரும் காலப்பகுதிக்கு அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் அல்லது அத்தகைய ஏதேனும் பதவியில் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளெவரும், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) உயர்நீதிமன்ற நீதிபதிகளினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினதும், நீதிபதிகளினதும் நியமனம் தொடர்பான அதன் பணியை பிரயோகிக்கையில் பேரவையானது, பிரதம நீதியரசரினது அபிப்பிராயத்தைப் பெறுதல் வேண்டும்.

## அட்டவணை

பாகம் I

(அ) பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளும்;

(ஆ) மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் நீதிபதிகளும்;

(இ) தவிசாளர் தவிர்ந்த நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

பாகம் II

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஆ) கணக்காய்வாளர் /தலைமையதிபதி;

(இ) பொலிசுப் பரிசோதகர் / தலைமையதிபதி;

(ஈ) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், (ஒம்புட்சுமான்);

(உ) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

(ஊ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்;

(எ) தவிசாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் தவிர்த்து ஏனைய இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள்.

பேரவையின் செயலாளர் நாயகமும் ஏனைய அலுவலர்களும்

41ஈ. (1) ஐந்து வருடகாலப்பகுதியொன்றுக்கு பேரவையினால் நியமிக்கப்பட வேண்டியவரான பேரவைக்கான செயலாளர் நாயகம் ஒருவர் அலுவலர்களும் இருத்தல் வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன்மேல், செயலாளர் நாயகம் மீள நியமிப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(2) பேரவையானது, அதனால் தீர்மானிக்கப்பட வேண்டியனவான அத்தகைய நிதிகள் நிபந்தனைகள் மீது, அதனது பணிகளை நிறைவேற்றுவதற்காக அது அவசியமென கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களை நியமிக்கலாம்.

பேரவையின் கூட்டங்கள்

41உ. (1) பேரவையானது குறைந்தபட்சம் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவையும், அத்துடன் இவ்வத்தியாயத்தின் அல்லது ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளினால் பேரவைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடியும் கூடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கூட்டங்கள், பேரவையின் தவிசாளராது பணிப்பின் மீது பேரவையின் செயலாளர் நாயகத்தினால் கூட்டப்படுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் வருகைதராதிருப்பின் பிரதம அமைச்சரும், பிரதம அமைச்சர் வருகைதராதிருப்பின் எதிர்க்கட்சித் தலைவரும் பேரவையின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) பேரவையானது, அது செய்ய தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு விதப்புரையையும், அங்கீகாரத்தையும் அல்லது முடிபையும் ஏகமனதாகச் செய்வதற்கு முயற்சித்தல் வேண்டுமென்பதுடன், ஏகமனதான முடிபொன்று இல்லாதவிடத்து, பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரை, அங்கீகாரம் அல்லது முடிபு எதுவும் அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் பேரவை உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோரினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய, வலிதுடையதாதலாகாது.

(5) தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் ஏனைய உறுப்பினர் மூலவாக்கொன்றை உடையவராதல் ஆகாது, ஆனால், பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான ஏதேனும் பிரச்சினையின் மீது வாக்குகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குகின்ற வேறு உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 41 ஆ இன் அல்லது உறுப்புரை 41 இ இன் கீழான ஏதேனும் நியமனத்திற்குப் பொருத்தமான ஆட்களை விதந்துரைப்பது அல்லது அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் உட்பட, பேரவையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக்கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறை என்பன பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) உறுப்புரை 41அ இன் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் அல்லது (உ) என்னும் உட்பந்தியின் கீழ் நியமிக்கப்பட்டவரும், பேரவையின்

முன் அனுமதியின்றி பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராதிருப்பவருமான பேரவையின் எவரேனும் உறுப்பினர், அத்தகைய கூட்டங்களுள் மூன்றாவது கூட்டத்தின் தேதியிலிருந்து பயன்பட, பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பேரவையானது, அது, முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது என்பன எவை எப்படியிருப்பினும் செயலாற்றத் தத்துவமுடையதாகவிருத்தல் வேண்டும். அத்துடன் பேரவையின் செயல், நடபடி அல்லது முடிபு, எதுவும் பேரவை முழுமையாக அமைத்துருவாக்கப்படவில்லை அல்லது அதன் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று உள்ளது அல்லது உறுப்பினர் ஒருவரது நியமனத்தில் குறைபாடுள்ளது என்னும் காரணத்தினால் வலிதற்றதாதலாகாது அல்லது வலிதற்றதாகக் கருதப்படுத்துமாகாது.

**பேரவையின் உறுப்பினர்கள் பதவியில் தொடர்ந் திருத்தல்**

*41ஊ*, பேரவையின் உறுப்பினர்களின் அல்லது உறுப்புரை *41ஆ* என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்றது எது எப்படியிருப்பினும், பேரவையின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய ஏனைய ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், பேரவையில் அல்லது அத்தகைய வேறு ஆணைக்குழுவில் புது உறுப்பினர்கள் பதவியேற்கும் வரை பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

**பேரவையின் தத்துவங்களும் கடமைகளும்**

*41ஏ*. (1) பேரவையானது, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை, முற்போந்த மூன்று மாதகாலப்பகுதியின் போதன அதன் செயற்பாடுகள்

பற்றி ஓர் அறிக்கையை சனாதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பேரவையானது, அரசியலமைப்பால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தால் அதன் மீது சுமத்தப்படக்கூடியவறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் உறுப்புரை “41ஆ” அல்லது உறுப்புரை “41இ” இன் கீழ் தகுதியான நியமம் செய்யப்படுபவர்களுக்கான பரிந்துரை அல்லது அனுமதி வழங்குவதற்கான படிமுறைகள் உள்ளடங்கலாக, விதிகளை ஆக்குவதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தகைய எல்லா விதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

பேரவையின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப் பிக்கப்படுதல்

41ஏ. பேரவையினால் உறப்படும் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

பேரவையின் முடிபுகளின் முடிவாழ் தன்மை

41ஐ. (1) நூற்றி இருபத்தாறாம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைவாக, நீதிமன்றம் எதுவும், பேரவையின் ஏதேனும் முடிபை அல்லது பேரவையினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரையை எத்தகையதுமான ஏதேனும் ஏதுவின் மீது அல்லது எத்தகையதுமான ஏதேனும் முறையில் ஏற்றுக் கவனிப்பதற்கான, கேட்பதற்கான அல்லநு முடிபு செய்வதற்கான அல்லது கேள்விக்குட்படுத்து

வதற்கான தத்துவத்தை அல்லது நியாயாதிக் கத்தைக் கொண்டிருத்தல் ஆகாது என்பதடன், அத்தகைய முடிபு, அங்கீகாரம் அல்லது விதப்புரை எல்லா நோக்கங்களுக்காகவும் முற்றும் முடிவான தாக இருத்தலும் வேண்டும்.

*அரசியலமைப் பின் VIII என்னும் அத்தியாயத்தை மாற்றீடு செய்தல்*

**15**. அரசியலமைப்பின் VIII என்னும் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப் படுகின்றது :-

"அத்தியாயம் VIII

**ஆட்சித்துறை**

*அமைச்சரவை*

*பிரதம அமைச்சரும், அமைச்சரவையும்*

42. (1) குடியரசின் அரசாங்கத்தை நெறிப் படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொறுப்பாக் கப்பட்ட ஓர் அமைச்சரவை இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பாகவிருத்தலும் வகை சொல்லற்பாததும் வேண்டும்.

(3) பிரதம அமைச்சர் அமைசசரவையின் தலைவராயிருத்தல் வேண்டும்.

(4) சனாதிபதி, பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை வாய்க்கப்பெற்றவராக இருக்கின்றாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

(5) பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பிலான ஒரு நம்பிக்கைப் பிரேரனை பாராளுமன்றம் சட்டத்தினால் அல்லது

நிலையியல் கட்டளையினால் ஏற்பாடு செய்யக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கை முறைக்கிணங்க சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக அதன் முதலாவது அமர்வில் பாராளுமன்றத்தில் கொணரப்படுத்தல் வேண் டும்:

ஆயினும் நம்பிக்கை பிரேரணையானது சமூகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படாவிடின் ஏற்கனவே பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்ட உறுப்பினர் பதவி வகிக்காதொழிதல் வேண்டுமென்பதுதான் பாராளுமன்ற சட்டத்தினால் அல்லது நிலையியல் கட்டளையினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய நடைமுறைக்கிணங்க அதனுடைய உறுப்பினர்களும் ஒருவரை பிரதம அமைச்சராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்திக்கான முதலாவது காப்புவாசகத்தின் நியதிகளின்படி உறுப்பினரொருவர் பிரதம அமைச்சராக தேர்ந் தெடுக்கப்படும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினர் உடனடியாக சனாதிபதியினால் சத்தியம் செய்விக்கப்படுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தேர்தலிலிருந்து இரு நாட்களினுள் அவர் சத்தியம் செய்விக்கப்படாத பட்சத்தில் அத்தகைய இருநாட் காலப்பகுதியின் முடிவில் பிரதம அமைச்சராக அவர் சத்தியம் செய்விக்கப்பட்ட வராகக் கருதப்படுத்தலும் வேண்டும்.

(7) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதம அமைச்சர் அல்லது பிரதம அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டிருப்பவராக கருதப்

படுபவர் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க பதவி வகிக்காதிருந்தாலொழிய அவர் அடுத்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் முடிவின் பின்னர் பிரதம அமைச்சர் ஒருவர் நியமிக்கப் படும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

*அமைச்சர்களும் அவர்களின் விடயங்களும் பணிகளும்*

**43.** (1) சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியு ரையின் மீது அமைச்சரவையின் அமைச்சர்களின தும், அமைச்சுக்களதும் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப் படும் பணிகளையும், விடயங்களையும் குறித்துறைத் தல் வேண்டும்.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரை யின் மீது அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக் களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென பாறாளுமன் றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.

(3) சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரை யின் மீது அமைச்சரவை அமைச்சர்களின் விடயங்களதும் பணிகளதும் குறித்தொதுக்குதல் களையும், அமைப்பையும் மாற்றலாம். அத்தகைய மாற்றங்கள் அமைச்சரவையின் இடையறாத் தொடர்ச்சியையும் பாராளுமன்றத்துக்கு அதற்குள்ள பொறுப்புடைமையை இடையறாத் தொடர்ச்சியையும் பாதித்தல் ஆகாது.

*அமைச்சரவை யின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள்*

**44.** (1) சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது, பாராளுமன்ற உறுப்பினர்க ளிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும் அவர்கள் அமைச்சரவையின் உறுப்பினர்கள் ஆக இருத்தலாகாது.

(2) சனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரை மீது கலந்தாலோசனையுடன் இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் அத்தகைய

அமைச்சர்களின் பொறுப்பில் இருக்க வேண்டிய அமைச்சுக்களின் விடயங்களதும் மற்றும் பணிகளதும் குறித்தொதுக்குதல்களையும் தீர்மானிக்கலாம்.

(3) சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது (2) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் குறித்தொதுக்குதலை மாற்றலாம்.

(4) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஒவ்வோர் அமைச்சரும் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் பொறுப்பாதல் வேண்டும்.

(5) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர், அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயத்திற்குரிய அல்லது பணிக்குரிய ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத எவரெனும் அமைச்சருக்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் கையளிக்கலாம். அத்துடன் அத்தகைய மற்ற அமைச்சருக்கு கையளிக்கப்பட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை, அத்தகைய தத்துவம் அல்லது கடமை அமைச்சரவையின் அத்தகைய அமைச்சர் மீது அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்விதம் இருப்பினும், பிரயோகித்தலும் புரிதலும் அத்தகைய மற்ற அமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

பிரதியமைச்சர்கள்

45. (1) சனாதிபதி, பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது, அமைச்சரவை அமைச்சர்கள் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதி அமைச்சர்களை நியமிக்கலாம்.

(2) அமைச்சரவையின் எவரேனும் அமைச்சர் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது பணி தொடர்பிலான ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அவரது பிரதியமைச்சருக்கு கையளிக்கலாம். அத்துடன் அவரக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது கடமையை அந்தத் தத்துவம் அல்லது கடமை அத்தகைய அமைச்சரக்கு அல்லது அவர்மீது எந்த எழத்திலான சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளதோ அல்லது சுமத்தப்பட்டுள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், பிரயோகிப்பதும் புரிவதும் அத்தயைக பிரதியமைச்சருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

பிரதம அமைச்சரின் பதவிக் காலமும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்போரின் எண்ணிக்கையினதும் காலத்தினதும் வரையறை

**46.** (1) (அ) அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை இருபத்தைந்தை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஆ) அமைச்சர்வை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும், கூட்டுமொத்த எண்ணிக்கை இருபத்தைந்தை விஞ்சுதலாகாது.

(2) பிரதம அமைச்சர் –

(அ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவரது பதவியை துறந்தாலொழிய : அல்லது

(ஆ) பாராளுமன்ற உறுப்பினரொருவராகலொழிய; இல்லாதொழிந்தாலொழிய அரசியலமைப்பின் ஏற்பாடுகளின்கீழ்

அமைச்சரவை தொடர்ந்தும் பணி யாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் மற்றும் ஒரு அமைச்சரவை உறுப்பினரல்லாத ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சராவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் அவர் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும் :-

(அ) பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அவர் சனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப்பட்டிருந்தாலொழிய;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் அவருடைய கைப்பட்ட கடிதத்தின் மூலம் அவர் தமது பதவியைத் துறந்தா லொழிய ; அல்லது

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தாலொழிய ; அல்லது

(ஈ) இவ்வுறுப்புரையின் 4 ஆம் பந்தியின் நியதிகளின் படி அகற்றப்பட்டா லொழிய.

(4) பாராளுமன்றமானது எவரேனும் அமைச்ச ரவை அமைச்சருக்கு அமைச்சரவையின் உறுப்பின ரொருவரல்லாத ஓர் அமைச்சருக்கு அல்லது ஒரு பிரதி அமைச்சருக்கு எதிராக ஒரு நம்பிக்கை யில்லாத தீர்மானமொன்றை நிறைவேற்றினால் அத்தகைய அமைச்சர் அத்தகைய நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மீது அத்தகைய பதவியினின்றும் அகற்றப்பட்டவராதல் வேண்டும்.

*பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரான அமைச்சரவை*

**47.** (1) பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் பணியாற்றுகின்ற அமைச்சரவை, அத்தகைய கலைத்தல் எவ்வாறிருப்பினும் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பொதுத் தேர்தல் முடிவுற்றதும் பணியாற்றா தொழிதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்க பிரதம அமைச்சரும், அமைச்சரவையின் அமைச்சர்களும், 46 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (அ) உட்பந்தியில் மற்றும் (3) ஆம் பந்தியின் (அ) அல்லது (ஆ) என்னும் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பதவி வகிக்கா தொழிந்தாலன்றி தொடர்ந்தும் பணியாற்றுதல் வேண்டும். அத்துடன் அத்தேர்தல் ஆணையாளரால் கொடுக்கப்படும் கட்டளைக்கற்களுடன் இணங்கி யொழுகுதலும் மற்றும் தேர்தலின் போது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிக்காது இருத்தலும் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தைக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது பிரதம அமைச்சர் இறந்துள்ளமை அல்லது பதவியை துறந்தமை எவ்வாறிருப்பினும் அமைச்ச ரவையானது. அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு, பொதுத்தேர்தல் முடிவுறும் வரை தொடரந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி அத்தகைய ஒரு அமைச்சரை பிரதம அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமாக நியமிக்கலாம்.

(3) பாராளுமன்றக் கலைத்தலுக்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் இறப்பதன் மீது, பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மீது அல்லது பதவி துறப்பதன் மீது, சனாதிபதி,

பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அத்தகைய அமைச்சரின் அமைச்சுக்குப் பொறுப்பாக இருப்பதற்கென அல்லது அத்தகைய அமைச்சரின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கவும் புரியவும் நிறைவேற்றவும் என வேறு எவரேனும் அமைச்சரை நியமிக்கலாம்.

*அமைச்சரவையைக் கலைத்தல்*

48. (1) பிரதம அமைச்சர், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் பொதுத் தேர்தல் முடிவுறுதலுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது தவிர, இறப்பதன் மூலம் அல்லது பதவி துறப்ப தன் மூலம் அல்லது அமைச்சரவை கலைக்கப்படுவதன் காரணமாக பதவி வகிக்காதொழிந்ததன் மேல், அமைச்சரவை கலைக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதி 42, 43, 44 மற்றும் 45 என்னும் உறுப்புரைகளின் நியதிகளின் படி ஒரு பிரதம அமைச்சரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சரிகளையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்ததும் வேண்டும் :

ஆயின், பிரதம அமைச்சர் அவ்வாறு பதவி வகிக்காதொழிந்ததன் பின்னர் பாராளுமன்றம் அலைக்கப்பட்டால், பொதுத்தேர்தல் முடிவடையும் வரை அமைச்சரவை, அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களை அதன் உறுப்பினர்களாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும். சனாதிபதி, பிரதம அமைச்சரின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்தகைய அமைச்சர்களுள் ஒருவரை நியமிக்கலாம், என்பதுடன், 47 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்:

ஆயின் மேலும் அத்தகைய கலைப்பின் பட்சத்தில் சனாதிபதி அத்தகைய கலைப்பு எவ்வறிருப்பினும் அரசியலமைப்பின் 42 ஆம் உறுப்புரையின் (4) முதல் (7) வரையான பந்திகளின் ஏற்பாடுகளுக்கு பயனளிக்க இயலச்செய்ய உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை நிராகரித்தால் அல்லது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிறை வேற்றினால் பிரதம அமைச்சர் பதவி துறந்துள்ள தாக கருதப்படுத்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சரவை கலைக்கப்பட்டதாதலும் வேண்டும் அத்துடன், சனாதிபதி 70 ஆம் உறுப்புரையின் கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் 42, 43, 44 மற்றும் 45 ஆம் உறுப்புரையின் பாராளுமன்றத்தைக் கலைக்கும் உறுப்புரைகளின் நியதிகளின்படி பிரதம அமைச்சர் ஒருவரையும், அமைச்சரவையின் அமைச்சர்களையும் அமைச்சரவையின் உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் நியமித்தல் வேண்டும்:

ஆயினும், இந்த அரசியல் அரசியலமைப்பின் நோக்கத்திற்காக, பாராளுமன்றம் முதலாவது கூடிய நாளிலிருந்து, முதல் இரண்டு ஆண்டுகளுக்குள், ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இரண்டு சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் மாத்திரம், அது நிராகரிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

மேலும் அத்தகையவொரு சந்தர்ப்பத்தில், 70 ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதியினால் தனது அதிகாரத் தத்துவங்கள் பிரயோகிக்கப்பட்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அரசியலமைப்

பின் 42 ஆம் உறுப்புரையின் (4) – (7) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்தும் பொருட்டு அவ்வாறு கலைக்கப்பட்டமை பாராது, அவரினால் பாராளுமன்றம் கூட்டப்படுதல் வேண்டும். அதன்படி, 42, 43, 44 மற்றும் 45 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதமர் ஒருவரும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களும் மற்றும் பிரதி அமைச்சரர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*பதில் அமைச்சர்களும் பிரதியமைச்சர் களும்*

49. அமைச்சரவையின் ஓர் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத ஓர் அமைச்சர் அல்லது பிரதியமைச்சர் அவருடைய பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எப்போதேனும் இயலாதிருக்கும்போது, அத்தகைய அமைச்சரவை அமைச்சரின், அமைச்சரவையின் உறுப்பினரொருவரல்லாத அமைச்சரின் அல்லது பிரதியமைச்சரின் இடத்தில் பதிற் கடமையாற்றுவதற்கென சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது பாராளுமன்றத்தின் உறுப்பினரெவரையும் நியமிக்கலாம்.

*அமைச்சரவை செயலாளர்*

50. (1) அமைச்சரவைக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) செயலாளர் பிரதம அமைச்சரின் பணிப்புக்கமைய அமைச்சரவை அலுவலகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும் என்பதுடன், பிரதம அமைச்சரினால் அல்லது அமைச்சரவையினால் அவருக்கு குறித்தொதுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளையும் கடமைகளையும் அவர் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*பிரதம அமைச்சரின் செயலாளர்*

51. (1) பிரதம அமைச்சருக்குச் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பநுடன், அவர் பிரதம அமைச்சரின் மதியுரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) செயலாளர், பிரதம அமைச்சரின் அலுவலகத்துக்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், பிரதம அமைச்சரின் பணிப்புக்களுக்கமைய அவரது கடமைகளையும் பணிகளையும் நிறை வேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

*அமைச்சுக்களின் செயலாளர்கள்*

52. (1) அமைச்சரவை அமைச்சரின் ஒவ்வோர் அமைச்சுக்கும் செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவர் பிரதம அமைச்சரின் மதியரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சின் செயலாளர் அவரது அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, அமைச்சரின் பொறுப்பிலுள்ள அரசாங்க திணைக்களங்களின் மீது அல்லது வேறு நிறுவனங்களின் மீது மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(3) ஓர் அமைச்சின் செயலாளர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் அமைச்சரவை கலைக்கப்படுவதன் மீது அல்லது சனாதிபதியினால் அரசியலமைப்பின் 43 ஆம் அல்லது 44 ஆம் உறுப்புரையின்கீழ் ஒரு தீர்மானம் செய்யப்படுவதன் மீது செயலாளர் பதவியை வகியாதொழிதல் வேண்டும். இது அமைச்சை இல்லாதாக்கும். விளைவை உடையதாயிருக்கும்.

(4) இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, சனாதிபதியின் செயலாளரின் அலுவலகம், அமைச்சரவை செயலாளரின் அலுவலகம்,

கணக்காய்வாளர் - தலைமையதிபதியின் அலுவலகம், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஓம்புட்சுமான்) அலுவலகம், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம், அரசியலமைப்புப் பேரவை, அத்துடன் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் என்பன அரசாங்க திணைக்களங்கள் அல்லாதவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பதவிச் சத்தியமும் உறுதி உரையும்*

53. இவ்வத்தியாயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்படும் ஆளொவ்வொருவரும் நான்காம் அட்டவணையிலும், ஏழாம் அட்டவணையிலும் தரப்பட்டுள்ள சத்தியத்தைச்செய்து கீழே ஒப்பமிடும்வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழே ஒப்பமிடும்வரை அவரது பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளுதலாகாது.".

*அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**16**. அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:-

(1) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(1) (இவ்வத்தியாயத்தில், "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பகிரங்கசேவை ஆணைக்குழு ஒன்றிருத்தல் வேண்டும். அது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களும் மூன்று உறுப்பினர்களுக்கு குறையாதோர் பகிரங்க அலுவலராகப் பதினைந்தாண்டுகளுக்கு

மேற்பட்ட அனுபவத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும். சனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது உறுப்பினர் ஒருவரை அதன் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.”;

(2) அவ்வுறுப்புரையின் (4) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும் :-

“(4) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் (2) ஆம் பந்தியின்கீழ் ஏதேனும் தகைமையீனத்துக்கு உட்பட்டவராக வந்தாலொழிய அல்லது சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்தின் மூலம் முன்னரே தமது பதவியை துறந்தாலொழிய அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறுக்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாலொழிய அல்லது 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய அல்லது (6) ஆம் பந்தியின்கீழ் தமது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்பட்டாலொழிய அவரது நியமன தேதியிலிருந்து மூன்றாண்டு காலப் பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.”; அத்துடன்

(3) அவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

“(7) சனாதிபதி, இரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு உறுப்பினரொருவர் ஆணைக்குழு தொடர்பான கடமைகளைப் புரிவதிலிருந்து அவருக்கு விடுப்பு வழங்கலாமென்பதுடன்,

அவர் அத்தகைய காலப்பகுதியின் போது அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு தகைமைபெற்ற ஆளொருவரை அத்தகைய விடுப்பு காலப்பகுதிக்கு தற்காலிக உறுப்பினரொருவராக நியமித்தலும் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 61உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்*

**17.** அரசியலமைப்பின் 61உ என்னும் உறுப்புரையானது அதன் (ஆ) என்னும் பந்தியிலிருந்து, "41அ" என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக, "41இ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலம் இதனால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரை திருத்துதல்*

**18.** அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியின் 41 அ என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக "41இ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (5) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லுக்கு உடன் முன்னராக, "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்;

(இ) அதன் (6) ஆம் பந்தியின் "சனாதிபதி" என்னும் சொல்லை உடனடுத்து "அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைவாக" என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்;

*அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**19.** அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலமும்;-

(அ) பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் (சமூகமளிக்காதோர் உட்பட) மொத்த எண்ணிக்கையின் அரைவாசிக்கு குறையாத உறுப்பினர்களால் அதன்சார்பில் வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றினால் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு பாராளுமன்றம் சனாதிபதியை வேண்டினாலொழிய அவ்வாறு செய்தலாகாது.

(ஆ) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தின் (இ) உட்பந்தியை நீக்குவதன் மூலமும்:-

அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**20.** அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) சட்டமூலம் ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்தாளில் இடப்படுவதற்கு முன்னர் ஆகக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**21.** அரசியலமைப்பின் 80 ஆம் உறுப்புரை, அதன் (2) ஆம் பந்நிதியை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தை சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது:-

"ஆயின் உட்பந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றிருந்ததிலிருந்து பதின்நான்கு நாட்களினுள் அல்லது மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையை கேள்விக்குற்படுத்தி மனுவொன்று கோப்பிடப்படும். பட்சத்தில் மக்கள் தீர்ப்பு செல்லுபடியானதென உயர் நீதிமன்றம் தீர்மானித்ததிலிருந்து பதின்னான்கு நாட்களினுள், சனாதிபதியானவர் சட்ட மூலத்தை சான்றுபடுத்த தவறுமிடத்து மேற்கூறப்பட்ட பதின்னான்கு நாட்களைக் கொண்ட காலப்பகுதி முடிவுறுவதன் மூலம் சட்ட மூலமானது சான்றுபடுத்தப்பட்டதாகக் கருதப்படுத்தல் வேண்டும்.".

**22.** அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 85 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

(அ) அதன் (1) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்: "ஆயின் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையினரதும் மூன்றில் இரண்டு பங்கினர்'' (சமூகமளிக்காதோர் உட்பட) அத்தகைய சட்டமூலத்திற்குச் சாதகமாக தமது வாக்குகளை அளித்ததிலிருந்து 28 நாட்களினுள் சனாதிபதி அத்தகைய ஏதேனும் சட்டமூலத்தை அல்லது சட்டமூலத்தின் ஏற்பாட்டை மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்பிக்கத் தவறுமிடத்து அத்தகைய சட்டமூலம் அல்லது அதன் ஏட்பாடுகள் மக்கள் தீர்ப்பின் மூலம் மக்களுக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளதாக கருதப்படுத்தல் வேண்டுமென்பதுடன் தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கிணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

(ஆ) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பகுதியை நீக்குவதன் மூலமும்;

**23.** அரசியலமைப்பின் 88 ஆம் உறுப்புரை "சனாதிபதி தேர்தலிலும்'' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலம் இத்தற்றிருத்தப்படுகின்றது. *அரசியலமைப்பின் 88 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**24.** அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்பும் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

(அ) அதில் "சனாதிபதிக்கான அல்லது" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுறுப்புரையின் (உ) உன்னும் பந்தியில், ‘‘சனாதிபதியின் அல்லது’’ என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றை நீக்கிவிடுவதன் மூலமும்;

(இ) அவ்வுறுப்புரையின் (எ) என்னும் பந்தியில், ‘‘சனாதிபதியின் அல்லது’’ என்னும் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றை நீக்கி விடுவதன் மூலமும்;

அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**25**. அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) அந்த பந்தியின் (iv) ஆம் விடயத்தை நீக்கி அதற்கு பதிலாக பின்வரும் விடயங்களை பிரதியீடு செய்தல்:-

“(iv) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லாத, 41அ எனும் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு உறுப்பினர் ஒருவர்;

(iv-அ) 41ஆ எனும் உறுப்புரையில் குறிப்பிடப் பட்டுள்ள ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர் ஒருவர் ;

(ஆ) அந்தப் பந்தியின் (xii) ஆம் விடயத்திற்கு உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயங்களை உட்படுத்துவதன் மூலம்:-

“(xiii) வேறு நாட்டு பிரஜை ஒருவரான, இலங்கை பிரஜை ஒருவர் ;”.

அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்

**26**. அரசியலமைப்பின் 92 ஆம் உறுப்புரை பின்வருமாறு அவ்வுறுப்புரையின் உட்பந்தி (இ) இன் முடிவில், “பாராளுமன்றத் தினாலும் அல்லது’’ என்னும் சொற்களை சேர்ப்பதன் மூலம் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 93 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**27.** அரசியாமைப்பின் 93 ஆம் உறுப்புரை “ குடியரசின் சனாதிபதிக்கான தேர்தலிலும்” என்னும் சொற்களை அதிலிருந்து நீக்கிவிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 94 ஆம் உறுப்புரையை நீக்கி விடுதல்*

**28.** அரசியலமைப்பின் 94 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

*அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**29.** அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரை அதன் (2) ஆம் பந்தியில் (41 அ) என்னும் இலக்கத்திற்கு பதிலாக, “41ஆ” என்னும் இலக்கததை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**30.** அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) உறுப்புரை 99 இன் 13 ஆம் பந்தியின் உட்ப்பந்தி (அ) இன் காப்பு வாசகம் நீக்கப்பட்டு பின்வரும் புதிய காப்பு வாசகக் பதிலீடு செய்யப்படுகின்றது:-

“ஆயின்;

(i) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை விலக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட ஒரு மாத காலப்பகுதி முடிவுறுமுன்னர் அவர் எழுத்து மூலமாக மனுவின் மூலம் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து, அம்மனு தாக்கல் செய்யப்பட்டு 2 வாரங்களுக்குள் உயர் நீதிமன்றம் தரப்பினரை செவிமடுத்தபின் விசாரிக்கப்படுவதற்கான உயர் நீதிமன்றத்தின் அனுமதி முதற்கட்டத்தில் வழங்குமாக இருந்தால்;

(ii) உயர் நீதிமன்றம் இறுதி விசாரணையின் பின்னர் அவ்வுறுப்பினரின் விலக்குதல் செல்லுபடியற்றது என்று தீரமானித்தால் அவரது ஆசனம் வரிதாக்கப்படாது;

(iii) உயர் நீதிமன்றம் தனது விசாரணையில் அரசியல் கட்சி கடைபிடித்த நடைமுறைகளை பற்றி தனது நியாயதிக்கத்தை பிரயோகித்தலாகாது என்பதுடன் உயர் நீதிமன்றத்தினுடைய விசாரணை அவ்விலக்குதலின் தகைமைகளுக்கு மட்டுப் படுத்தப்படல் வேண்டும்;

(iv) அம்மனு உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களுக்கு குறையாத குழாமினால் விசாரிக்கப்பட்டு இரண்டு மாத கால எல்லைக்குள் தீர்ப்பளிக்கப் படல் வேண்டும்;

(v) உயர் நீதிமன்றம் அவ்விலக்குதல் செல்லுபடியானதென்று தீர்க்குமிடத்து அத்தீர்ப்பின் திகதியிலிருந்து உற்ப்பினருக்கான வெற்றிடம் உருவாகும்;

(iv) அவ்விலக்குதல் செல்லுபடியானதென்று உயர் நீதின்றம் தீர்ப்பளித்தாலும் கூட குறித்த பாராளுமன்ற உறுப்பினர் அப்பாராளுமன்றத் தின் காலத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் கட்சி அரசாங்கம் அமைத்தாலொழிய உறுப்புரைகள் 43, 44 மற்றும் 45 இன் கீழ் அமைச்சர் பதவியினை வகிப்பதிலிருந்து தகுதியற்றவராவார்.

(ஆ) பின்வரும் புதிய பந்நி உறுப்புரை 99 பந்தி 14 ஆக பயனுறுமாறு சேர்க்கப்படவேண்டும்.

"(14) அவ்வுறுப்புரையின் (13) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்படவாறு தவிர, நீதிமன்றமெதுவும் பாராளுமன்ற உறுப்பினரொருவரான அதன் உறுப்பினரொருவருக் கெதிராக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக்குழுவினால் எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள

ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயதிக்கத்தை கொண்டிருத்தலாகாது என்பதுடன், அதற்கிணங்க நீதிமன்ற மெதுவும் ஏதேனும் அத்தகைய நடவடிக்கையை அல்லது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையை தடுக்கும், தடைப்படுத்தல் அல்லது தடைசெய்யும் தடைக்கட்டளையை அல்லது வேறு ஏதேனும் நிவாரணத்தை வழங்குதல் ஆகாது.".

*அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**31.** அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "41 அ" என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, "41 ஆ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (1) ஆம் பந்தியில், ''சனாதிபதி'' என்னும் சொல்லை உடனடுத்துப்பின்னர், "சனாதிபதி, 41 ஆ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக" என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்;

(இ) அவ்வுறுப்புரையின் (7) ஆம் பந்தியில், "41 அ என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, 41 ஆ என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

*அரசியலமைப்பின் 104ஆ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**32.** அரசியலமைப்பின் 104 ஆ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையின், 4 (அ) என்னும் பந்தியை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 104உ எனும் உறுப்புரையைத் திருத்துதல்*

**33.** அரசியலமைப்பின் 104 உ உன்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "அவர்" என்னும் சொல்லை உடனடுத்து, ''அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துக்கமைவாக'' என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்;

(ஆ) அதன் (7) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் ''அறுபது'' என்னும் சொல்லுக்கு பதிலாக, ''அறுபத்தைந்து'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

*அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**34.** அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரை, அவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியில், "41அ" என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, "41 இ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**35.** அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "41அ" என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, ''41இ'' என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (2) ஆம் பந்தியில், "41 அ" என்னும் இலக்கத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, ''41இ'' என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 111இ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**36.** அரசியலமைப்பின் 111இ என்னும் உறுப்புரை அதன் (2) ஆம் பந்தியில், "அல்லது குடியிரசின் சனாதிபதிக்கான தேர்தல் எதிலும்'' என்னும் சொற்களை நீக்குவதன் மூலமும் இத்தாற் றிருத்தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 111ஈ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**37.** அரசியலமைப்பின் 111 ஈ என்னும் உறுப்புரை அதன் (1) ஆம் பந்தியில், "41 அ" என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, "41இ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும் இத்தற்றிருத் தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 111உ ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**38.** அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரை இதனால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வுறுப்புரையின் (5) ஆம் பந்தியில், “41அ” என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, “41இ” என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுறுப்புரையின் (6) ஆம் பந்தியில், “சனாதிபதி” என்னும் சொல்லை உடனடுத்து பின்னர், “அரசிய லமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன்” என்னும் சொற்களை உட்புகுத்தவும்.

*அரசியலமைப்பின் 129 ஆம் உறுப்புரையை திருத்துதல்*

**39**. அரசியலமைப்பின் 129 ஆம் உறுப்புரையின் (1) ஆம், (4) ஆம் பந்திகள் இத்தால் நீக்கப்படுகிறது.

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையை திருத்துதல்*

**40**. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், “41அ” என்னும் இலக்கத்திற்குப்பதிலாக, “41(இ) என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (1) ஆம் பந்தியில், “நன்னடத்தையின் போது பதவிலகித்தல் வேண்டும்” என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாக, “இருத்தல் வேண்டும்” என்னும் சொற்களை இடுகை;

(இ) அதன் (3) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்ப்பந்தியில், “சனாதிபதியினால்” என்னும் சொல்லை உடனடுத்து, “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது” என்னும் சொற்களை உட்புகுத்துக;

(ஈ) அதன் (4) ஆம் பந்தியில், “41அ” என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, “41இ” என்னும் இலக்கத்தை இடுக.

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கு அ-ஏ சேர்த்தல்*

***41.*** *பின்வரும் உறுப்புரைகள் 153 ஆம் உறுப்புரையை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றவென்பதுடன் அவை அரசியலமைப்பின் உறுப்புரை 153 அ, 153ஆ, 153இ, 153ஈ, 153உ, 153ஊ, 153எ மற்றும் 153 ஏ எனப் பயனுறுதலும் வேண்டும்:-*

*“கணக்காய்வு சேவை ஆணைக் குழுவின் அமைப்பு*

*153அ. (1) (இவ்வத்தியாயத்தில், “ ஆணைக் குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கணக்காய்வு சேவை ஆணைக்குழுலொன்று இருத்தல் வேண்டும். அது ஆணைக்குழுவின் தவிசாளரான கணக்காய் வாளர் தலைமையதிபதியையும் அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சானாதிபதியால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-*

*(அ) பிரதி கணக்காய்வாளர் தலைமையதி பதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவி வகித்த கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் ஒய்வுபெற்ற இரண்டு அலுவலர்கள்;*

*(ஆ) இலங்கை உயர்நீதிமன்றம், மேன்முறை யீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத் தின் ஒய்வுபெற்ற நீதிபதியொருவர்; அத்து டன்*

*(இ) இலங்கை நிருவாக சேவையின் ஒய்வு பெற்ற வகுப்பு 1 அலுவலர்.*

*(2) (அ) ஆணைக்குழுவின் உறுப்பினரொரு வராக நியமிக்கப்படும் ஆளொருவர்-*

(i) *சனாதிபதிக்கு முகவரியிட் டனுப்பும் கடிதத்தின் மூலம் அவரது பதவியை முன்னரே துறந்தாலொழிய;*

(ii) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான பதவியிலிருந்து அதற்றப்பட்டாலொழிய: அல்லது

(iii) பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக வந்தாலொழிய.

மூன்று ஆண்டுகள் பதவிவகித்தல் வேண்டும்:

(ஆ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் ஆளொருவர் அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது மேலதிக காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டும்.

(3) சனாதிபதி குறித்தளிக்கப்படும் காரணத்துக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும் (1) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படும் எவரேனும் ஆளை பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் மற்றும் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படலாம் அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் தவிசாளரின் அல்லது உறுப்பினர்களின் பதவிக் காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

(5) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் ஆணைக் குழுவால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

ஆணைக குழுவின் கூட்டங்கள்

153 ஆ. (1) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றம் (1) ஆம் பந்திக்கு அமைவாக, ஆணைக்குழுவின் கூட்டங்கள், இலங்கை அரச கணக்காய்வு சேவை தாபிக்கப்படல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அதற்கு இடைநேர் விளைவான வேறு கருமங்கள் என்பவற்றுக்காக சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் தத்துவங்களும் பணிகளும்

153 இ. (1) இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்னும் தத்துவங்கள் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் பின்வருவன தொடர்பான ஏதேனும் கொள்கைக்கு அமைவாக இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த

உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம். இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் பற்றிய திட்டங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(ஆ) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டிறுதி மதிப்பீடுகளை தயாரித்தல்; அத்துடன்

(இ) சட்டத்தினால் ஏற்பாடு செய்யக்கூடிய வாறான அத்தகைய வேறு தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிர யோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்று தல்,

(3) ஆணைக்குழு (2) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப் பட்ட விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய் வித்தல் வேண்டும்

(4) அத்தகைய ஒவ்வொரு விதியும் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்ற நடைமுறைக்கு விருதல் வேண்டும்.

(5) அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானி யில் அத்தகைய வெளியீட்டின் மூன்று மாதங்களி னுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதற்கு முன் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதாக்கப்பட்டதாகக் கரதப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் அல்லது இலங்கை அரச கணக்காய்வு சேவையின் எவரேனும் அலுவலரின் முடிபில் செல்வாக்குச் செலுத்துதல் அல்லது செல்வாக்கு செலுத்த எத்தனித்தல் தவறொன்றாதல்*

153ஈ. (1) ஆணைக்குழுவின், அதன் எவரேனும் உறுப்பினரின் அல்லது இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் அலுவலரின் ஏதேனும் முடிபில், அவரது கடமையின்போது தவிர, நேரடியாக அல்லது மறைமுகமாக, தானாக அல்லது எவரேனும் வேறு ஆளினூடாக, எத்தன்மைததான ஏதேனும் முறையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது செல்வாக்குச் செலுத்த எத்தனிக்கின்ற ஆனொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*சட்ட நடவடிக்கை முறைகளிலிருந்தான விடுபாட்டு உரிமை*

153உ. 126 ஆம் உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தின் மீது அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்துக்கமையவும் மற்றும் 153எ என்னும் உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், இவ்வத்தியாயத்தின்கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணிகளைப் புரிவதன் பயனாக ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை விசாரணை

செய்வதற்கான, எடுத்துரைப்பதற்கான அல்லது கேள்விக்குட்படுத்துவதற்கான எத்தகையதுமான தத்துவத்தை அல்லது நியாயாதிக்கத்தை எந்த நீதிமன்றமோ நியாய சபையோ கொண்டிருத்த லாகாது.

செலவுகளும் செலவினங்களும்

153ஊ. ஆணைக்குழுவின் செலவுகளும் செல வினங்களும் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக் கப்படுதல் வேண்டும்.

நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்தல்

153எ. இலங்கை அரச கணக்காய்வு சேவையின் எவரேனும் அலுவலரின் நியமனம், பதவியுயர்வு அல்லது இடமாற்றம் தொடர்பிலான ஏதேனும் கட்டளையினால் அல்லது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட ஒழுக்காற்று கருமம் அல்லது பதவிநீக்கம் ஒன்றின் மீதான ஏதேனும் கட்டளையினால் இன்னலுற்ற அத்தகைய அலுவலர் 59 ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அது ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கான வேறுபடுத்துவதற்கான அல்லது இல்லாதாக்கு வதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஆணைக்குழு பாராளு மன்றத்துக்கு வகை சொல்லல் வேண்டும்

153ஏ. ஆணைக்குழு அதன் பணிகளை நிறை வேற்றுவதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க பாராளு மன்றத்துக்குப் பொறுப்பாதலும் வகைசொல்லற் பாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆண்டில் அதன் செயற்பாடுகளின் அறிக்கை யொன்றை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பாராளுமன்றத்து சமர்ப்பித்தலும் வேண்டும்.”.

*அரசியலமைப்பின் 154 உறுப்புரையைத் திருத்துதல்*

**42.** அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை அவ் உறுப்புரையின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"(1) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள், சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம், அரசியலமைப்பின் 44 ஆம் 45 ஆம் உறுப்புரைகளின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் அமைச்சர்களின் மற்றும் பிரதி அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதித்துறைச்சேவை ஆணைக்குழு, அரசியலமைப்பு பேரவை, 41(ஆ) என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் ஆணைக்குழுக்கள், நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூர் அதிகாரசபைகள், பகிரங்க கூட்டுத்தாபனங்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதுமான எந்த கம்பெனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சிசபை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனிகள் என்பவற்றை, அவற்றின் கணக்குகள் உள்ளடங்கலாக, கணக்காய்வு செய்தல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 154 ஊ உறுப்புரையைத் திருத்துதல்*

**43.** அரசியலமைப்பின் 154 ஊ என்னும் உறுப்புரையின் (2) மற்றும் (3) ஆம் பந்திகளை நீக்குவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 154 ண உறுப்புரையைத் திருத்துதல்*

**44.** அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியானது, ''41அ'' என்னும் இலக்கத்திற்குப் பதிலாக இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகிறது.

*அரசியலமைப்பின் 155அ உறுப்புரையைத் திருத்துதல்*

**45.** அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) பந்தியில், "ஐந்துக்குக் குறையாத மற்றும் ஏழுக்கு மேற்படாத" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக, "ஏழு" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (1) ஆம் பந்தியில், "41அ" என்னும் இலக்கத்துக்கு பதிலாக, ''41ஆ'' என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (1) ஆம் பந்தியில், ''சனாதிபதி'' என்னும் சொல்லை உடனடுத்துப்பின்னர் ''அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது'' என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும் ;

(ஈ) அதன் (4) ஆம் பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்து, "குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காகவும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும்'' என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்*

**46.** அரசியலமைப்பின் 155இ என்னும் உறுப்புரை, அவ்வுறுப்புரையில், "நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கு அமைய" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "நூற்றியிருபத்தாறாம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்திற்கும் மற்றும் 105ஓ என்னும்

உறுப்புரையின் கீழ் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

*அரசியலமைப் பின் 155ஊஊ நீக்குதல்*

**47**. அரசியலமைப்பின் 155ஊஊ ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 155ஊஊஊ என்னும் உறுப்புரையை திருத்துதல்*

**48**. அரசியலமைப்பின் 155ஊஊஊ ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முறையே அரசியலமைப்பின் 155எ, 155ஏ, 155ஒ, 155ஓ மற்றும் 155ஔ ஆம் உறுப்புரைகளாகப் பயனுறுத்தும் வேண்டும் :-

*“ஆணைக் குழுவின் தத்துவங்கள்*

155எ. (1) (அ) பொலிசு பரிசோதகர் தலைமை யதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழு பொலிசு பரிசோதகர் தலைமை யதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பில் அதன் தத்து வங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தி யாயத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மாகாண பொலிசு சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படும் போதிலெல்லாம் அத்தகைய ஆணைக்குழுக்களின் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும் பணிக ளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசு சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும்

எவரேனும் இன்னலுற்ற ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக்கவனிப்பதற்கும், புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கைமுறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நிவாரணத்தை ஏற்பாடு செய்தலும் வேண்டும். ஆணைக்குழு நிவாரணத்தை வழங்கும் பட்சத்தில், ஆணைக்குழுவானது பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*(3)* ஆணைக்குழு, பொலிசு அலுவலர்கள் தொடர்பில் பின்வருவன உள்ளிட்ட எல்லாக் கருமங்களையும் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் ஏற்பாடு செய்தலும் தீர்மானித்தலும் வேண்டும் :-

(அ) ஆட்சேர்ப்பு, பதவியுயர் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான திட்டங்களை, அவை தொடர்பில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக வகுத்தமைத்தல் ;

(ஆ) பயிற்சியளித்தல் மற்றும் பொலிசு சேவையின் வினைத்திறனையும் மற்றும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல் ;

(இ) தேசிய பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும் ; அத்துடன்

(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள்.

*(4)* ஆணைக்குழு அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் உள்ளடக்கியுள்ள நிரல் I இன் பின்னிணைப்பு *1* இன் கீழ் அதற்குரித்தாக்கப்

பட்டதான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் அத்தகைய எல்லாப் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் குறித்த சில தத்துவங்களைக் குழு வொன்றுக்குக் கையளித்தல்*

155ஏ. (1) ஆணைக்குழுவானது, அதனால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகுதிகளைச் சேர்ந்த பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியதான (ஆணைக்குழுவின் உறுப்பினர் களைக் கொண்டிராத) ஆணைக்குழுவின் குழு வொன்றுக்கு கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய குழுவின் நியமனத்தை வர்த்தமானியில் வெளியிடச் செய் வித்தல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட குழுவொன்றின் கூட்டங்களுக்கான நடபடி முறை மற்றும் கூட்ட நடப்பெண் என்பன ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக் கிணங்க இருத்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

*ஆணைக் குழுவினால் குறித்த சில பணிகள் கையளிக்கப் படல்*

156ஒ. (1) ஆணைக்குழு, பொலிசு அலுவலர் களின் ஏதேனும் வகுதியின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு மற்றும் பதவி நீக்கத் தத்துவங்களை ஆணைக்குழுவால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் நடைமுறைகளுக்கும் அமைய பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான

கலந்தாலோசனையுடன் எவரேனும் பொலிசு அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணைக்குழு ஏதேனும் அத்தகைய கையளிப்பை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

மேன்முறையீடு செய்யும் உரிமை

155ஒ. (1) ஆணைக்குழு, பொலிசு அலுவலர்களின் ஏதேனும் வகுதியின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலான அதன் தத்துவங்களை எவரேனும் பொலிசு அலுவலருக்கு 155ஒ ஆம் உறுப்புரையின் கீழ் கையளித்துள்ளவிடத்து. கையளிக்கப்பட்ட தத்துவங்களை அவர் பிரயோகிக்கையில் அத்தகைய பொலிசு அலுவலரால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கெதிராக பொலிசு பரிசோதக்ர் தலைமையதிபதி ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பொலிசு அதுவலர் ஒருவர் தொடர்பில் 155ஏ மற்றும் 155ஒ ஆம் உறுப்புரைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது குழுவொன்றால் அல்லது பொலிசு அதுவலரால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் தொடர்பான எதேனும் கட்டளையால் அல்லது ஒழுக்காற்று விடயம் அல்லது பதவிநீக்கம் மீதான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற பொலிசு அலுவலர் ஒருவர், ஆணைக்குழுவினால் மேன்முறையீடொன்றை செய்வதற்கும் கேட்கப்படுவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைமுறையையும் நேரகாலப்பகுதியையும் ஒழுங்குபடுத்தி காலத்துக்குக்காலம் ஆணைக் குழுவினால் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க, அத்தகைய கட்டளைக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) ஆணைக்குழுவானது, (1) ஆம் பந்தியின் கீழ் அல்லது (2) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீது அத்தகைய கட்டளையை மாற்றுவதற்கான, வேறுபடுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான அல்லது உறுதிப்படுத்துவதற்கான அல்லது அது தொடர்பில் பணிப்புகளை வழங்குவதற்கான அல்லது அது பொருத்தமானதென அதற்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய மேலதிக அல்லது வேறு விசாரணைக்கு கட்டளையிடுவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, இவ் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் கீழ் காலத்துக்குக்காலம் அதனால் ஆக்கப்படும் விதிகளை வர்த்தமானியில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) 155ஏ என்னும் அல்லது 150ஒ என்னும் உறுப்புரைகளின் கீழ் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது குழுவொன்றுக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு செய்யப்படும் அதன் தத்துவங்களின் ஏதேனும் கையளிப்பின்மீது, ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களின் அத்தகைய கையளிப்பு வலுவில் இருக்கையில், இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட மேன்முறையீட்டு உரிமைக்கமைவாக, எந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அத்தகைய கையளிப்பு செய்யப்படுகின்றதோ அந்த வகுதியைச் சேர்ந்த பொலிசு அலுவலர்கள் தொடர்பில் அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகித்தலோ நிறைவேற்றுதலோ அல்லது புரிதலோ ஆகாது.

*நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடு செய்தல்*

155 ஔ. எவரேனும் பொலிசு அதுவலர் தொடர்பில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட பதவியுயர்வு, இடமாற்றம் அல்லது ஒழுக்காற்று விடயம் மீதான ஏதேனும் கட்டளை அல்லது

பதவிநீக்கம் என்பன தொடர்பான ஏதேனும் கட்டளையால் இன்னலுற்ற எவரேனும் பொலிசு அலுவலர் 59 ஆம் உறுப்புரையின் கீழ் தாபிச்சுப்பட்ட நிருவாக மேன் முறையீட்டு நியாய சபைக்கு மேன் முறையீடு செய்யலாம். அந்தியாயசபை ஆணைக் குழுவால் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது முடிபை மாற்றுவதற்கு வேறுபடுத்துவதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கு அல்லது உறுதிப் படுத்துவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

**49.** அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது:-

"உளதாம் விதிகளையும் ஒழுகிகு விதிகளையும் பேணுதல்

155க. ஆணைக்குழுவானது வேறு விதமாக ஏற்பாடு செய்யும் வரை, பொலிசுப்படை தொடர்பில் இவ்வுறுப்புரை நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவாறான எல்லா விதிகளும் ஒழுங்கு விதிகளும் மற்றும் நடவடிக்கை முறைகளும் தொடர்ந்து செயற்பாடுடையதாததும் வலுவிலிருத் தலும் வேண்டும்.".

**50.** அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் (1) ஆம் பந்தியில், "41 அ" என்னும் இலக்கத்துக்குப் பதிலாக, "41 இ" என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (2) ஆம் பந்தியில், ''நியமிக்கப் படுத்தலும் நன்னடத்தையின்போது பதவி வகுத்தலும் வேண்டும்'' என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக, "நியமிக்கப்படுத்தல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (4) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்ப்பந்தியில், "சனாதிபதியினால்" என்னும் சொல்லை உடனடுத்துப் பின்னர்" அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

அரசியலமைப்பில் புதிய அத்தியாயங்கள் XIXஅ, XIXஆ, XIXஇ மற்றும் XIX ஈ எனபனவற்றை உட்புகுத்துதல்

**51.** பின்வரும் புதிய அத்தியாயங்கள் அத்தியாயங்கள் அரசியலமைப்பில் அத்தியாயம் XIX இனை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதடன் அவை முறையே அரசிய லமைப்பின் XIXஅ XIXஆ XIXஇ மற்றும் XIX ஈ என்னும் அத்தியாயங்களாகப் பயனுறுத்தும் வேண்டும்:-

"அத்தியாயம் XIXஅ

## இலஞ்சம் அல்லது ஊழலை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

256 அ. (1) பாராளுமன்றம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்தவற்காக ஆணைக்குழுவொன்றினைத் தாபிப்பதற்கு சட்டத்தினால் ஏற்பாடு செய்தல் வேண்டும். அத்தகைய சட்டம் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்புப் பேரவையின் விதப் புரையின் மீது சனாதிபதியினால் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும்;

(ஆ) அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட முறைப் பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களின் ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துதல் அல்லது

புலன் விசாரணை செய்தலை பணிக்கின்ற தத்துவம் மற்றும் இலஞ்ச அல்லது ஊழல் தொடர்பிலான நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் தவறுகளுக்கான குற்ற வழக்கு தொடருவதற்கான தத்துவம் உட்பட்ட ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும்;

(இ) ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் மற்றும் இலங்கை திறத்தவராக உள்ள ஊழலைத்தடுப்பது தொடர்பிலான வேறு ஏதேனும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளிற்கும்.

(2) பாராளுமன்றம் அவ்வாறு ஏற்பாடு செய்யும் வரை 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம், ஆணைக்குழு அதனது சொந்தப் பிரேரணை மீதோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான முறைப்பாடு ஒன்றின் மீதோ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல் ஒன்றை விசாரிப்பதற்கு அல்லது புலனாய்வு செய்வதற்கு அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு அது சட்டமுறையானதாக இருத்தல் வேண்டும் என்ற திரிபுகளுக்கு அமைய ஏற்புடையதாதல் வேண்டும்.

அத்தியாயம் XIX ஆ

## தேசிய பெறுகை ஆணைக்குழு

தேசிய பெறுகை ஆணைக்குழு

156ஆ. (1) (இவ்வத்தியாயத்தில், “ஆணைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பெறுகை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். அது பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது

நிருவாகம் ஆகிய துறைகளில் நிரூபணமான அனுபவத்தை உடைய ஆட்களிடையேயிருந்து ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதி உறுப்பினர் ஒருவரை ஆணைக் குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத்தின் மூலம் பதவியை முன்னரே துறந்தாலன்றி அல்லது அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் குறித்தளிக்கப்பட்ட காரணத்துக்காக சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும தவறொன்றிற்கு சட்ட நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை ஒன்றின் அல்லது உள்ளூரதிகாரசபை ஒன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி அல்லது அவர் மீது குடியியற்றகுதியீனத்தை விதிப்பதற்கான தீர்மாமொன்று 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பாராளுமன்றத்தின் தீர்மானம் ஒன்றின் மூலம் தீரமானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய படிகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் ஆகியோரின் பதவிக்காலத்தின் போது குறைக்கப்படுதலுமாகாது.

ஆணைக் குழுவின் பணிகள்

156இ. (1) எல்லா அரசாங்க நிறுவனங்களினாதும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத் திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டி நெறிகளையும் வகுத்தமைத்தலும், அவ்வழிகாட்டி நெறிகளை வர்த்தமானியில் வெளியிடச்செய்வித்தலும் மற்றும் அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் முன்வைத்தலும் ஆணைக்குழுவின் பணியாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் பொறுமைக்குப் பங்கமின்றி பின்வருவனவற்சை் செய்தல் ஆணைக்குழுவின் பணிகளாதல் வேண்டும்:-

(அ) அரசாங்க நிறுவனங்களினால் செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின், வேலைகளின், ஆலோசனை சேவைகளின் மற்றும் தகவல் முறைமைகளின் எல்லா பெறுகைகளும் முன்னரே அங்கீகரிக்கப்பட்ட செயல் திட்டங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டங்களின் அடிப்படையிலானதா என்பது பற்றி, கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஆ) அரசாங்க நிறுவனங்களிற்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச்சேவைகளை மற்றும்தகவல் முறைமைகளை வழங்குவதற்கான தகைமைபெற்ற விலைகூறுபவர்கள் யாவருக்கும் அப்பண்டங்கள் மற்றும் சேவைகளையும், வேலைகளையும்,

ஆலோசனை சேவைகளையும் மற்றும் தகவல் முறைமைகளையும் வழங்குவதற்காக விலைகூறும் செயற்பாட்டில் பங்கு பற்றுவற்கான சமமான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்படுகின்றதா என்பது பற்றி கண்காணித்தலும், தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(இ) அரசாங்க நிறுவனங்களிற்கான பண்டங்கள் மற்றும் சேவைகளை, வேலைகளை, ஆலோசனைச் சேவைகளை மற்றும் தகவல் முறைமைகளை வழங்குவதற்கான ஒப்பந்தகாரர்களைத் தெரிவு செய்வதற்கும், ஒப்பந்தங்கள் வழங்குவதற்குமான நடவடிக்கை முறைகள் நியாயமானதும் வெளிப்படையானவையாகவும் இருக்கின்றனவா என்பது பற்றி கண்காணித்தலும் தோதான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்;

(ஈ) அரசாங்க நிறுவனங்களினால் நியமிக்கப்படும், பெறுகைகள் தொடர்பாக பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுக்கள் ஆகியனவற்றின் உறுப்பினர்கள், பொருத்தமான தகைமையுடையவராக இருக்கின்றார்களா என அறிக்கையிடுதலும்; அத்துடன்

(உ) தாபிக்கப்பட்ட நடடிக்கை முறைகளுக்கும் வழிகாட்டி நெறிகளுக்கும்புறம் அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் பற்றிய அறிக்கைகளைப் புலனாய்வு செய்தலும், அத்துடன் அத்தகைய பெறுகைகளிற்கு பொறுப்பான அலுவலர்களை அவசியமான நடவடிக்கைக்காக இயைபான அதிகாரிகளுக்கு அறிக்கையிடுதலும்.

ஆணைக் குழுவின் தத்துவங்கள்

156ஈ. (1) ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல் மூலம் பின்வருவனற்றைச் செய்ய எவரேனும் ஆளைத்தேவைப்படுத்தலாம்:-

(அ) ஆணைக்குழுவினால் கேள்விக்குட்படுத்தப்படுவதற்கு ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளிப்பதற்கு;

(ஆ) அவ்வாளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை ஆணைக்குழுவுக்கு காண்பிப்பதற்கு:

(2) (அ) ஓராம் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றினால் அவ்வாறு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது, ஆணைக்குழுவின் முன்னர். தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றி தவறும்;

(ஆ) அத்தகைய அறிவித்ததுடன் இணங்கியொழுகுவதில் ஆணைக்குழுவுக்கு முன்னர் தோன்றி, ஆனால் ஆணைக்குழுவால் அவரிடம் கேட்கப்பட்ட எவையேனும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கும்; அல்லது

(இ) ஓராம் பந்தியின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றில் காண்பிக்கப்படுதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை காண்பிப்பதற்கு நியாயமான காரணமின்றி தவறும் அல்லது மறுக்கும்;

ஒவ்வோராளும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை

விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மதியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 104ஞ ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் ஒவ்வொன்றும் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் கருமத்தை விசாரிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆணை குழுவின் கூட்டங்கள்

156உ. (1) ஆணைக்குழுவானது அதன் பணிகளை புரிதலுக்காக அவசியமாக இருக்கக்கூடியவாறாக அடிக்கடி கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமுகமளிக்கதவறின் சமுகமாயுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கிடையேயிருந்து அக்கூட்டத்துக்கான தவிசாளர் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் முன்றாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முடிபுகள் முடிவு எடுக்கப்படும் கூட்டத்தில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாக இருக்கும்பட்சத்தில் தவிசாளர் அல்லது கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைவாக ஆணைக்குழு அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலவல்களைக் கொண்டு நடாத்துதலையும் தீர்மானிக்கலாம்.

(6) ஆணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடமொன்றுள்ளது எது எவ்வாறிருப்பினும், செயலாற்றுவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவின் செயல், நடவடிக்கை அல்லது முடிபு எதுவும் அத்தகைய வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினரொருவரின் நியமனத்தில் குறைபாடு உள்ளது என்ற காரணத்தால் மட்டும் செல்லுபடியற்றதாக அல்லது செல்லுபடியற்றதாக்கப்படுவதாக கருதப்படுதலாகாது.

ஆணைக் குழுவின் பணியாட் டொகுதி

156ஊ. (1) ஆணைக்குழுவால், தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது, அதன் பணிகளை முறையாக நிறைவேற்றுதவற்கு அவசியமானதென கருதப்படக்கூடியவாறாக, செயலாளர் நாயகம் மற்றும் அத்தகைய வேறு அலுவலர்களையும் ஆணைக்குழு நியமித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் தன்டனைச் சட்டக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் கீழ் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர் கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது அவருடைய பணிகளைப் புரிவதில் அவரால் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு எதிராக வழக்கு நுடர்ச்சியெதுவும், வழக்கெதுவும் அல்லது வேறு நடவடிக்கைமுறையெதுவும் அமைவதாதல் ஆகாது.

*ஆணைக் குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின மீது பொறுப்பிக்கப் படல்*

156எ. (1) ஆணைக்குழுவின் செலவுகள் திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*பொருள்கோடல்*

156ஏ. இவ்வத்தியாயத்தில், ''அரசாங்க நிறுவனம்'' என்பது அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், பகிரங்கக்கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை, அரசாங்கத்துக்கு உரித்தாக்கப் பட்ட ஏதேனும் தொழில் அல்லது வேறு தொழிற் முயற்சி மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 அம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தக் கம்பெனியில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை ஐம்பது சதவீதத் மேற்பட்ட பங்குகளை வைத்திருக் கின்றதோ அந்தக் கம்பெனி ஒன்று என்பனவற்றை உள்ளடக்குகின்றது.".

## அத்தியாயம் XIX இ

## தேசிய பாதுகாப்புப் பேரவை

*தேசிய பாதுகாப்பு பேரவையை தாபித்தல்*

156ஒ. (1) தேசிய பாதுகாப்பு பேரவையொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் அது பின்வரு வோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பிரதம அமைச்சர்;

(ஆ) பாதுகாப்பு அமைச்சர்;

(இ) தேசிய பாதுகாப்பு என்னும் விடயம் பொறுப்பிக்கப்பட்ட பாராளுமன்றத்தின் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்;

(ஈ) பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி

(உ) பாதுகாப்பு ஆளணியின் தலைவர்

(ஊ) சட்டத்துறை தலைமையதிபதி மற்றும்

(எ) சட்டத்தால் தீர்மாணிக்கப்படக்கூடிய வேறெவரேனும் பகிரங்க அலுவலர்கள் அல்லது ஆட்கள்

(2) பிரதம அமைச்சர் தேசிய பாதுகாப்பு பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும். பிரதம அமைச்சர் இல்லாதவிடத்து, பாதுகாப்பு அமைச்சர் தேசிய பாதுகாப்பு பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) பாராளுமன்றமானது தேசிய பாதுகாப்பு பேரவையின் தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் அவற்றோடு தொடர்புபட்ட வேறு கருமங்களுக்கும் சட்டத்தால் ஏற்பாடு செய்தல்.

(4) இதன் (3) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப் பட்டவாறு சட்டமொன்று ஆக்கப்படும்வரை அதன் கூட்டங்கள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு பேரவை பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய நடவடிக்கை முறையை அதுபின்பற்றுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIX இ

### அரச சபை

அரச சபை

159ஔ. (1) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை கலந்துரையாடுவதற்கு அரச சபை ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) பொது மக்களினால் அரசாங்கத்திற்கு கட்டுப் படுத்தாத மதியுரை வழங்குவதற்கான மன்றாக அரச சபை இருக்கும்.

(3) இச்சபை பிரதம அமைச்சரை தவிசாளராக வும் பின்வருவோரை உறுப்பினர்களாகவும் கொண்டிருக்கும்:-

(i) நிதி அமைச்சர்;

(ii) வெளிவிவகார அமைச்சர்;

(iii) பாதுகாப்பு அமைச்சர்;

(iv) சபாநாயகர்;

(v) எதிர்க்கட்சி தலைவர்;

(vi) பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் பிரதிநிதித்துவப்படுத்தும் காட்சிகள் தவிர்ந்த பாராளுமன்றத்தின் பிரநிதித்துவமுடைய காட்சிகள் ஒவ் வொன்றையும் பிரநிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினர்;

(vii) சட்ட மா அதிபர்;

(viii) பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத வியாபாரம், பொருளாதாரம், அரசியல் , விஞ்ஞானம், சட்டம், சர்வதேச உறவுகள் மற்றும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய தொழில் சார் நிபுணர்களான 12 உறுப்பினர்கள். இவ்வுறுப்பினர்கள் நியமிப்பதில் பாலினம் பன்முகத்தன்மை இளைஞர்கள் உள்ளடங்கலான இலங்கையின் பன்மைத்துவத்தைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(4) அரச சபையின் செயற்பாடுகள் மற்றும் படிமுறைகள் சம்பந்தமாக பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் மேலதிக ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

*அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்*

**52.** அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அதன் ''பகிரங்க அலுவலர் என்பதற்கான பொருட் கோடலின் (எ) என்னும் பந்தியில், ''பாராளுமன்றப் பேரவையின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அரசியலமைப்புப் பேரவையின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(ஆ) அதன் ''பகிரங்க அலுவலர்'' என்பதற்கான பொருட்கோடலின் (ஐ) என்னும் பந்தியில், ''41அ'' என்னும் இலக்கத்திற்குப் பதிலாக, ''41ஆ'' என்னும் இலக்கத்தை இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**53.** இச்சட்டத்தின சிங்கள, தமிழ் ஊர்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**54.** (1) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது.

(1) இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற பின்வரும் ஒவ்வோராளும் அத்தகைய பதவிகளைத் தொடர்ந்தும் வகித்தல் வேண்டும் என்பதுடன் 41இ ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்திக்கமைய அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அப்பதவிகளின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(i) பிரதம நீதியரசர்;

(ii) உயர்நீதிமன்ற நீதிபதிகள் ;

(iii) நீதித்துறைச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ;

(iv) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர்;

(v) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள்;

(vi) சட்டத்துறை தலைமையதிபதி;

(vii) கணக்காய்வாளர் தலைமையதிபதி ;

(viii) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி ;

(ix) நிருவாகத்திற்கான பராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்);

(x) பாராளுமன்றச் செயலாளர் நாயகம்;

(xi) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் ; அல்லது

(xii) நீதித்துறை அலுவலர் ஒருவர் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர்; பகிரங்க அலுவலர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர்; அல்லது

(xiii) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பின்வருவனவற்றின் தவிசாளராக அ்லலது உறுப்பினரொருவராக பதவிவகிக்கின்ற ஒவ்வோராளும்,இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியில் இருந்து பயன்பட அத்தகைய பதவியை வகிக்காதொழித்தல் வேண்டும்.

(அ) பாராளுமன்றப் பேரவை;

(ஆ) தேர்தல் ஆணைக்குழு;

(இ) பகிரங்க சேவை ஆணைக்குழு ;

(ஈ) தேசிய பொலிசு ஆணைக்குழு ;

(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ;

(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பிலான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு ; அல்லது

(எ) நிதி ஆணைக்குழு ;

(ஏ) தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ;

(ஐ) கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு;

(ஒ) தவிசாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் தவிர்ந்த ஏனைய இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள்.

ஆயின், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த தேதியன்று மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது ஓர் உறுப்பினராக பதவிவகிக்கின்ற எவரேனும் ஒருவர் அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்திற்கிணங்க முறையேயான ஆணைக்குழுக்கள் அமைத்துருவாக்கப்படும் வரை முறையேயான அவர்களது பதவிகளுக்கான தத்துவங்களையும் பணிகளையும் தொடர்ந்து பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முந்தைய நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ள —

(அ) பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான எல்லாக் கருமங்களும் ; அத்துடன்

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு பொலிசு அலுவலர்களினால் செய்யப்பட்ட எல்லா மேன்முறையீடுகள் தொடர்பிலான எல்லாக் கருமங்களும்,

அத்தேதியிலிருந்து பயன்பட 155அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை அதற்கிணங்க தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(4) இலங்கை அரச கணக்காய்வு சேவையின் உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று, கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பிலானதும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முற்போந்த நாளன்று பகிரங்க சேவை ஆணைக்குழுவின்

முன்னர் முடிவுறாதுள்ளதுமான எல்லாக் கருமங்களும் 153அ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்கு அத்தேதியிலிருந்து பயன்பட மாற்றப்படுதல் வேண்டுமென்பதுதுடன் அதற்கிணங்க கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் முன்னரான நாள் நிலைபெற்றிருந்த ஒன்பதாவது பாராளுமன்றம் முன்னராகக் கலைக்கப்பட்டாலொழிய, ஓகத்து 20, 2022 அன்று, அதன் முதல் அமர்வைக் கொண்டிருந்ததாகவும் அன்றிலிருந்து 5 வருட காலத்திற்கு தொடர்ந்தும் செயற்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று சனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஆள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக 17, நவெம்பர் 2019 அன்று தெரிவு செய்யப்பட்டு அன்றிலிருந்து 5 வருட காலத்திற்கு பதவிவகிப்பவராக கருதப்படுவார்.

(7) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் பாராளுமன்றம் பேரவையின் விதப்புரையை அல்லது அங்கீகாரத்தை பெறவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றவிடத்து, பாராளுமன்றப் பேரவை பற்றிய குறிப்பீடானது அரசியலமைப்புப் பேரவை பற்றிய குறிப்பீடொன்றாக வகித்துப் பொருள் கொள்ளப் படுதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.